புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய சாஸ்திரகும்மியில் விவிலியக் கருத்துக்கள்

ஜோ. நெல்சன்,
உதவிப் பேராசிரியர், இலயோலா கல்லூரி,
மெட்டாலா, இராசிபுரம்.

முனைவர். டே. கிறிஸ்துமணி,
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 620017.

**ஆய்வுச்சுருக்கம்**

நாட்டுப்புற இலக்கியத்திற்கும் - சங்க இலக்கியத்திற்கும் நெடிய தொடர்பு உண்டு. எல்லாவற்றையும் கடந்து வந்துவிட்ட நவீன இலக்கியத்திற்;கும்; பொருண்மை நிறைந்த தொடர்பு உள்ளது. சங்க இலக்கியத்தைப் போல் நாட்டுப்புற இலக்கியத்திற்கு இலக்கணவரம்பு இல்லை என்றாலும் அதை கட்டுபாடற்ற எதார்த்த வாதத்தைப் பின்புலமாகக் கொண்டு விளங்குகின்றன. நாட்டுப்புற இலக்கியத்தின் முக்கிய நோக்கம் மக்களுக்கு அறக் கோட்பாட்டை உணர்த்துவதே ஆகும். வளரும் குழந்தைகளுக்கு அது நீதி போதனைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. வாழ்க்கைப் பிரச்சனை, பொறாமை, மனஉணர்வு, கள்ள நட்பு, ஆசை, துன்பம், சாதி, பூசல், ஒழுக்கம், வேதனை முட்டாள் தனம், நீதி முதிலியவற்றை கூறுவதாக அமையும். நாட்டுப்புற இலக்கியம் சமூக வரலாற்றை அறிய உதவும் நோக்கம் உடையது. பண்பாடுக் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்வதுடன், பழங்காலச் சமூகம் சார்ந்த செய்திகளையும், சமகால செய்திகளையும் விவிலியக் கருத்துக்களோடு எடுத்துரைக்கப்படுகிறது. தமிழ் இலக்கியப் போக்கு தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கிய மரபு, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நூல்களை வேதநாயக சாஸ்திரியார் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு இலக்கியங்களையும், நூல்களையும் எழுதிக் கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதுடன் கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சிக்கு ஆதாரமாகவும் அமைக்கின்றார் வேதநாயகர். இக்கட்டுரையானது வேதநாயகர் படைத்துள்ள நாட்டுப்புற இலக்கியமான சாஸ்திரக்கும்மியில் அமையபெற்ற விவிலிய அறக்கருத்தக்களை எடுத்துரைப்பதேயாகும்.

கலைச்சொற்கள்: வல்லமை, அன்பு, உவமைகள், சடங்குகள், நற்செய்தி, புகழ், விமர்சனம், சடங்கு, நோக்கம், ஆவியானவர்.

## முன்னுரை

நாட்டுப்புற இலக்கியம் என்பது மனித சமுதாயத்தின் வேர்கள் என்றும் அது அச்சமுதாயத்தில் ஆழமாக புரையோடி கிடக்கின்றது. மனித சமுதாயம் என்பது எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதை குவித்து வைத்து நாளடைவில் அது இலக்கியமாக மாறுகின்றது என்கிறார் முனைவர். சு.சக்திவேல். நாட்டுப்புற இலக்கியம் மண்ணின் மனத்தையும், அதன் சிறப்பினையும் கொண்டது. நாட்டுப்புற இலக்கியங்களை எழுதாத இலக்கியம் என்று கூறுவர். இந்தியா சிற்றூர்களில் வாழ்கின்றது என்பார் காந்தியடிகள். இச்சிற்றூர்களில் வாழும் மக்களின் வாழ்வு நிலைகள் நாட்டின் பண்பாடகிறது. அவர்களது வாழ்வை ஒட்டிய இலக்கியங்களே நாட்டுப்புற இலக்கியமாக உருப்பெருகின்றது.

## நாட்டுப்புற இலக்கியத்தின் நோக்கம்

நாட்டுப்புற இலக்கியத்திற்கும் - சங்க இலக்கியத்திற்கும் நெடிய தொடர்பு உண்டு. எல்லாவற்றையும் கடந்து வந்துவிட்ட நவீன இலக்கியத்திற்;கும்; பொருண்மை நிறைந்த தொடர்பு உள்ளது. சங்க இலக்கியத்தைப்போல் நாட்டுப்புற இலக்கியத்திற்கு இலக்கணவரம்பு இல்லை என்றாலும் அதை கட்டுபாடற்ற எதார்த்த வாதத்தைப் பின்புலமாகக் கொண்டு விளங்குகின்றன.நாட்டுப்புற இலக்கியத்தின் முக்கிய நோக்கம் மக்களுக்கு அறக் கோட்பாட்டை உணர்த்துவதே ஆகும். வளரும் குழந்தைகளுக்கு அது நீதி போதனைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. வாழ்க்கைப் பிரச்சனை, பொறாமை, மனஉணர்வு, கள்ள நட்பு, ஆசை, துன்பம், சாதி, பூசல், ஒழுக்கம், வேதனை முட்டாள் தனம், நீதி முதிலியவற்றை கூறுவதாக அமையும். மோத்தத்தில் நாட்டுப்புற இலக்கியம் சமூக வரலாற்றை அறிய உதவும் நோக்கம் உடையது. பண்பாடுக் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்வதுடன், பழங்காலச் சமூகம் சார்ந்த செய்திகளையும், சமகால செய்திகளையும் எடுத்துரைப்பதையே இவ்விலக்கியம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### நாட்டுப்புற இலக்கியத்தின் தனித்தன்மைகள்

இவ்விலக்கியம் யாரால் இயற்றப்பட்டது என்று ஆசிரியரின் பெயரை தெரிந்து கொள்ள முடியாதது. வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது. இன்பத்துன்பநிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து அழுத்படுவாதாகும். பெரும்பாண்மையான நாட்டுபுற இலக்கியம் எளிமையாதாக இருக்கும். எப்போதும் பொது நலத்தை எடுத்துரைப்பதாகவே இருக்கும். எளியமுறையில் பாட இசைவடிவமாகவும் இருக்கும். உயர்வான கருத்துக்களை எளிமையான முறையில் விளக்கவைப்பதாகும். இது சமூதாயப்பாடலாக உள்ளது. தனிமனிதப்படைப்பன்று. வருத்தி உழைப்போர் சோர்வு தெரியாமல் இருக்கும் பொருட்டு பாடி மகிழ்வது நாட்டுப்புற இலக்கியம் என்று கூறலாம். சமூக நீதியை வலியுறுத்தும் கதை பொதி பாடல்களாகவும் இவை இருக்கும். இது “நாட்டுப்புற இலக்கியம் என்றும், நாடோடி பாடல்கள் என்றும், வாய்மொழி இலக்கியம் என்றும் வகைகளாக வகைபடுத்துவர்”1.

தமிழ் இலக்கியப் போக்கு தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கிய மரபு, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நூல்களை வேதநாயக சாஸ்திரியார் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு இலக்கியங்களையும் நூல்களையும் எழுதிக் கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதுடன் கிறிஸ்தவ இலக்கியத்துவம் பெறுவதுடன் கிறிஸ்தவ இலக்கிய வளர்;ச்சிக்கு ஆதாரமாகவும் அமைக்கின்றார் வேதநாயகர். இக்கட்டுரையானது வேதநாயகர் படைத்துள்ள நாட்டுப்புற இலக்கியமான சாஸ்திரக்கும்மியில் அமையபெற்ற விவிலிய அறக்கருத்தக்களை எடுத்துரைப்பதேயாகும்.

### சாஸ்தரிரியாரின் நாட்டுப்புற இலக்கியங்கள்

1. பேதின்பக் காதல்
2. தியானடப்புலம் பல்
3. கலியாண வாழ்த்து
4. ஞான ஏத்தப்பாட்டு
5. ஞானக் கும்மி
6. சாஸ்திரக் கும்மி

இங்கு சாஸ்திரக் கும்மி என்ற நூலை மட்டும் கட்டுரைக்கு எடுத்து கையாளப்பட்டுள்ளது. மேலும் இந்நூல்களில் உள்ள சாஸ்திரியார் பயன்படுத்திய அதிகபடியான விவிலிய கருத்துக்களை எடுத்துரைக்கும் விதமாக அமைகின்றது.

### சாஸ்திரியாரின் கொள்கைத் தெளிவு

தமிழ் மொழியைப் ‘பக்தியின் மொழி’ என்று வழங்குவர்; அருள்திரு தனிநாயகம் அடிகள். சமயம் சார்புடைய இலக்கியங்கள் தமிழுக்கு வளமை சேர்த்து இருப்பதே இங்குச் சிறப்புக் காரணமாக அமைந்துள்ளது. பல்வேறு சமயத்தவர்கள் தங்களின் சமயங்களை பரப்புவதற்கும் இறைவனின் புகழைப் போற்றுதற்கும் விரும்பம் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்களைப் போன்றே தஞ்சை வேதநாய சாஸ்திரியார். பக்தி இலக்கியங்கள் படைத்து தமிழ் மொழிக்கு வளம்; சேர்த்துள்ளார் எனலாம். இவரது “வாழ்க்கை

இறையனுவத்தில் தொடங்கி இறையறிவில் வளர்ச்சி அடைந்து, இறைப்பாடல்களில் முழுமையுற்றது என்பார்”2. இவரது இலக்கியப் படைப்புகள் பலவும் இறைப் பாடல்களின் தன்மையைப் போன்று இறையியல் உட்கரு கொண்டவையாகும். அவ்வகையில், வேதநாயக சாஸ்திரியார் கடவுளைப் பற்றிப் பாடுவதையே தம் குறிக்கோளாக கொண்டிருப்பதை அவர் பாடிய இலக்கியங்கள் வழியாக நாம் அறிந்து கொள்ள முடியும்.

### கும்மிப் பாடல்கள்

சிறப்பான நிகழ்வுகளில் மனிதன் தன் மகிழ்வினை ஆடியும், பாடியும் பலரோடு கலந்து கொண்டாடுகின்றனர். அந்நிகழ்ச்சிகளில் தன் ஆற்றலை இசைக் கலந்த கூத்தோடு இணைத்தும், கூத்தின்றி இசையாகவும் வெளிப்படுவதுண்டு. அந்த வெளிப்பாட்டு முறையில் அந்நிகழ்ச்சிகளின் தொண்மையான கலைச் சிறப்பையும், நிகழ்த்துபவர்களின் பண்புச் சிறப்பையும் அறிய முடியும். இவ்வகையாகப் பாடல்களைப் பாடி மக்கள் கொண்டாடும் நிகழ்வுகளை,

1. தெய்வத் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் பாடப் பெறும் பாடல்கள்.
2. குடும்பத் தொடர்புடைய நிகழ்ச்சியில் பாடப் பெறும் பாடல்கள்.

என இருவகைகளாக பிரிக்கலாமென்று ‘ஆறு அழகப்பன் தம் நாட்டுப்புற பாடல்கள் என்ற திறனாய்வு கட்டுரையில் சுட்டுகிறார்.

### கும்மி இலக்கணம்

வெண்டளை பிறழாத ஏழு சீர்களை உடைய இரண்டடிப் பாட்டை “கும்மி” என்பர். கலாநிலையம் இராககோபாலச்சாரியார். ‘இலக்கண விளக்க யாப்பியல்’ என்ற தமது நூலில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் அல்லாத வேறு தலைகள் கும்மியில் வரக்கூடாது. அவ்வாறு வரின் கும்மியின் ஓசை கெட்டுவிடும். “ஒவ்வொரு அடியின் ஈற்றசைச் சீரும் காய்ச்சீராக இருத்தல் நலம். எதுகைத் தொடை அமைந்த அடிகளைக் கொண்டு ‘பா’ நடத்துதல் அவசியமாகும்”3 என்பர்.

### கும்மி பெயர்க் காரணம்

“கும்மிப் பாடல்கள்-ஆய்வு” என்ற கட்டுரையில் ஆறு இராமகாதன் என்பவர், பலபேதையரும், பெதும்பையரும் வட்டமாகச் சுற்றி வந்துப் பாடிக் கை குவித்தடிக்கும் விளையாட்டாதலால் (கும்மி முதல் - கைகுவித்து அடித்தல் எனப்பட்டது)”4 என்பர்.

### சாஸ்திரக் கும்மி – நூல் அமைப்பு

வேதநாய சாஸ்திரியாரின் ‘சாஸ்திர கும்மி’ கி.பி. 1915 – ஆம் ஆண்டு முதன் முதலில் அச்சில் வந்தது. அதன்பின்பு 1969 – ஆம் ஆண்டு மீண்டும் திருத்திய அச்சி வெளியிடப்பட்டது. இக்கும்மி மொத்தம் 81 அத்தியாயங்களில் ‘அவையடக்கம்’ முதலாக ‘புஸ்தகத்தின் முடிவு’ என்று இறுதி அத்தியாயமாக 850 கும்மிப் பாடல்களை உள்ளடக்கியது. ன்று சமுதாயத்திலே பலவகை சடங்குமுறைகள். முனித வாழ்விற்கும், மேம்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கக் கூடியவை. வாழ்வில் அன்றாடம் சந்திக்கின்ற நடைமுறைகளை கண்டித்தும், மறுத்தும் விமர்சித்தும் தம் பாடல்களை இயற்றியுள்ளார்.

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கும் கிறிஸ்தவர் எல்லோரும் ஆதிகிறிஸ்தவர்கள் அல்லர். இந்து மதத்தைத் தாய்மதமமாகக் கொண்டவர்களே. இந்து மதத்தை வெறுத்துக் கிறிஸ்தவர்களாயினர், முழுவதுமாக மனம்மாறி கிறிஸ்தவரானாலும் தம் தாய் மதமானது இந்து மதத்திலேயே வேரூன்றி இருக்கின்ற பல வகையான சாத்திர முறைகளைக் கைவிடாமல் பின்பற்றி வந்தனர். இதைக் கண்ட வேதநாயக சாஸ்திரியார் இந்த சாந்திர முறையைக் கண்டிக்கிறார். விவிலியத்தில் சாஸ்திரக் கும்மியானது இறை உணர்வை எடுத்துரைக்கின்றது. இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் இறைவனின் மேன்மையை, இறையியலின் புனிதத் துவத்தை, இறையாட்சியின் வல்லமையை விளக்கி, இயேசு பிறானே ஒரே தேவன் என்ற

கொள்கை நெறியை வெளிப்படுத்துகிறார். அதேபோல இந்துக்கள் கொண்டிருக்கும் பழக்கக்க வழக்கங்களைக் கண்டிப்பவராகவும் காட்சித் தருகிறார்.

ஞானப்பெண்ணே......ஞானப்பெண்ணே.....

சமூக விடுதலையில் மகளிர் உரிமைகள் நிலைநிறுத்தப்படப் போராடி வரும் காலக்கட்டத்தை அப்போதே உணர்த்திருத்த வேதநாயக சாஸ்திரியார் அந்நாளிலேயே சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் பெண்ணின் மேம்பாட்டை கெடுக்கும் எதிரிகளாகும் என்று உணர்ந்தார். அத்தகைய எதிரிகளை அழித்து நிலைபெற வேண்டிய ஞானமுடையவளாக பெண் திகழவேண்டும் எனக்கருதி ஒவ்வொரு பாடலின் இறுதியில், ஞானப்பெண்ணே...... ஞானப்பெண்ணே...... என்ற சொற்றொடரை பயன்படுத்தி இருக்கின்றர். மூடநம்பிக்கைக் கொண்ட சாத்திர, சம்பிரதாயச் சடங்குகள் அனைத்தும் மனித வாழ்வை நெறிப்படுத்தும் என்ற தாக்கத்தை தகர்த்தெரிவதும், நித்திய நன்மையையும், நீண்ட பொருளையும் தேடாது தந்திர சாத்திரங்கள் மூலம் துர்மார்க்கத்தைக் காட்டும் வஞ்சம் கொண்ட சாதிகளை திட்டுவார்.

“அஞ்சல் செய்தாதியைப் போற்றாமல் எம
தாண்டவன் வேதத்தை விட்டுவிடு
வஞ்சக ரண்டகச் சாதிகள் செய்யும் துன்
மார்க்கத்தைக் கேளடி ஞானப் பெண்ணே”5

என்று சாடுகிறார்.

சாஸ்திரக் கும்மியில் விவிலியக் கருத்துக்கள்

வேதநாயக சாஸ்திரியார் இறை நம்பிக்கை மிகுந்தவராய், இறைவனது பராமரிப்பு நன்மையையே தரும் என்னும் உறுதிப்பாடு உடையவராய், இறைப்புகழ் பரப்புவராய், இறைவனில் ஒன்றித்திடும் முயற்சியில் இருந்தார். சாஸ்திரியார் அவரது படைப்புகள் அனைத்தும் விவிலியக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றன என்பதை சாஸ்திர கும்மியில் சாதிகளின் வித்யாசம் என்ற தலைப்பில் சாஸ்திரியார்,

“கடவுளை கனம் செய்பவனை அந்த
கடவுளும் கனம் செய்துவைப்பார்” 6

இறைவனின் மீதும் நம்பிக்கைக் கொள்பவனை சுவர் ஒருபோதும் துன்பம் அடைய செய்வதில்லை என்ற கருத்தை

‘இயேசு தமதுக் கையை நீட்டி அவனைத் தொட்டு
எனக்கு சித்திமுண்டு, சுத்தமாக்டு என்றார். உடனே
குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்’ (மத் - 8.3)

என்று விவிலியம் எடுத்துரைக்கின்றது.

பரலோக இராஜியத்தில் பிரவேசிக்க வழி

இறைவன் ஒருவனைத் தவிர வேறு தெய்வம் ஏதும் இல்லை. இறைவனின் இராஜியத்திற்கு செல்ல வேண்டுமானால் அவரது 10 கற்பனைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதை விவிலியத்தில் கூறியுள்ளதை வேதநாயகரும் தமது நூலில் இவ்வாறு குறிப்படுகிறார்.

“உன்னைப்போல் உன்னுடைய தோழனையும் நேசி
என்றுன்னுடன் தேவன் உரைத்திருக்க”7

பத்துக்கற்பனையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் கொலை செய்யாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்ச சொல்லாதிருப்பாயாக. உன் தாயையும், தந்தையும் கணம் பண்ணுவாயாக உன்னிட்டில் நீ அன்பு கூர்வது போல் உன் அயலானிட்த்திலும் அன்பு செலுத்த வேண்டும் என்ற செய்தியை விவிலியம் மத் - 19:19ம் அதிகாரம் எடுத்துரைக்கும் தன்மையை தம் பாடலில் சாஸ்திரியார் விளக்கு கூறியுள்ளார். மேலும் இறைவனின் இராஜியத்திற்குள் புக வேண்டுமானால் இதனை உவமையாக திருவிவிலியத்தில்,

மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில்
பிர வேசிப்பதை பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின்
காதில் நுழைவது எளிதாயிருக்கும் என்று

உங்களுக்கு சொல்லுகிறேன் (மத்தேயு.19:24)

என்று இறைவன் கூறும் உவமைகளை வேதநாயகார் தம் நூலில் அப்படியே கையாண்டிருப்பதை நாம் அறியலாம்.

ஞனப்பெண்ணே....ஞானப்பெண்ணே....

சமூக விடுதலையில் மகளீர்களின் உரிமைகளையும், தன்னலத்தையும் நிலை நாட்ட போராடிய காலங்களிலிருந்தே வேதநாயக சாஸ்திரியார் அந்த நாளிலே சாஸ்திரிங்கள், சம்ரதாயங்கள் போன்றவற்றையும் மூடநம்பிக்கைகள், சடங்குகள், இவற்றை எதிர் கொள்ளும் வகையிலும் எதிரிகளை அழித்து நிலை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பெண்ணாணவள் ஞானத்திலும், அறிவிலும் சிறந்து செயல்பட வேண்டும் என கருதி ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஞானப்பெண்ணே....ஞானப்பெண்ணே! என்ற சொல்லைப் பயன்படுத்தி சாஸ்திர கும்மியைப் பாடியுள்ளார். அவ்வாறு பெண்களுக்கு தன் உரிமை எது என்று எடுத்துக் கூறும் வகையில், விவலிய செய்திகளையும் உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் விதமாக இந்த சாஸ்திர கும்மி என்ற நூலை ஆசிரியர் படைத்திருப்பது போற்றத்தக்கதாகும். விவிலிய கருத்தோடு கூடிய செய்தியை வேதநாயக சாஸ்திரியார், எதை நாம் செய்கிறோமோ? அதையேதாம் நாம் பெறுவோம் என்று பாவம் செய்தால் அதன் பலனை அடைவோம் என்றும், மற்றவர்களுக்கு நீங்கள் வழங்கும் தீர்ப்பானது உங்களுக்கும் அவ்வாரே வழங்கப்படும் என்பதை பெண்ணுக்கு உரைப்பதைப் போன்று உலக மக்களுக்கு கூறுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளது.

''எந்தப்படியிட்டனந்தயோ அதன்
கேற்றம் குறைச்சல் இல்லாமல்
அத்தப்படி உனக்காகும் என்ற சொல்லை
அறிந்தது இல்லையோ ஞானப்பெண்ணே'' 8

இக்கருத்தானது விவிலியத்தில்

ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; மற்றவர்களுக்க நீங்கள் அளக்கின்ற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் என்ற இறைவார்த்தை ஞானப்பெண்ணே....ஞானப்பெண்ணே என்று பெண்ணை முன்னிலைப்படுத்தி கூறுவதுபோல, இறை நற்செய்தியினை சாஸ்திர கும்மியின் மூலம் மக்களுக்கு தெரியபடுத்தப்படுகின்றது. இதனால் மனிதன் பாவம் செய்யாமல் உண்மையான நிலையை அறிந்து பாவசெயலுக்கு அஞ்சி நடபானேயானால் அவன் நித்திய வாழ்வை அடைவான் என்பது இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. இதே செய்தியை சாஸ்திர கும்மியில் 'சாதிக்ள கட்டு' என்ற தலைப்பில் உள்ள பாடல் வரிகளும் இதையே எடுத்துரைக்கின்றது

எந்தளந்தப் பேர்களைக் கேட்டாலும் நீ
இட்டதல்லோ வரும் ஞானப்பெண்ணே.... (மத்தேயு - 7:2)

என்று நாம் எந்தபடியால் அளக்கின்றோமோ அதேப் படியால் நமக்கும் அளக்கப்படும் என்ற இறை செய்தியை தம்நூலில் இனிமையாக விளக்குக் கூறியுள்ளார் வேதநாயக சாஸ்திரியார் அவர்கள்.

பேயாட்டம்

வேதநாயக சாஸ்திரியார் சாஸ்திரகும்மியில் சாதிகள் பேயாட்டம் என்ற தலைப்பில் உண்மையாகவே சாதி என்ற பேய் பிடித்துள்ளது என்று கூறாமல் மூடநம்பிக்கையால் மனிதர்கள் செய்யும் தவறுகளை இப்பகுதியில் எடுத்துரைக்கிறார். கிராமங்களில் இப்பொழுதும் நடை முறையில் உள்ள வழக்கங்களை சுட்டிக்கூறுகிறார். பெண்ணுக்கு பேய்பிடித்தல் என்ன வழி முறைகளை பின்பற்றுவார்கள் என்பதை,

பெண்னை தலைசுற்றி ஆடவைப்பார்கள்
மூத்திரத்தைக் கரைத்து தலையில் ஊற்றுவார்கள்
தலைமயிர்களை அறுத்து விடுவார்கள்

*ஆனவரை செருப்பினால் அடித்து பேயை விரட்ட எண்ணுதல்*
*பிரம்பினால் அடிப்பார்கள்*
*புகைகள் பல காட்டி ஓடச்செய்த பல்லைக்கடித்தபடி வித்தைகள் பல செய்வார்கள்.*

*இவ்வாறு செய்தால் பெண்ணைபிடித்த பேய் போய்விடும் என்று செய்வது மூடத்தனமே ஞாணப்பெண்ணே! உண்மையாகவே நீ செயல்கள் ஒன்றும் பேய்களுக்கும் பிசாசுகளுக்கும் பயம் காட்டினால் சற்றும் கூட அஞ்சாமல் இருக்கும். தீயிலே எப்போதும் இருக்ககூடிய பிசாசுக்கு உன் செருப்படி வலியை உண்டாக்குமோ ஞாணப்பெண்ணே! ஆவியான பிசாசுகள் தான் பிரம்படி பட்டாலும் அதற்கு வலிக்குமோ? ஞாணப்பெண்ணே! எப்போதும் தீயிலே இருக்கும் பிசாசுக்கு உன்னால் வேதனை உண்டாகுமோ? ஒருபோதும் ஆகாது மாறாக நீ இறைவனிடம் செபத்தின் மூலம் நம்பிக்கை பிடித்துள்ள தீய பிசாசும் ஓடிப்போகும். இதைசெய்யாமல் நீ வேறசெயல்களை செய்தால் பிசாசு அப்பெண்ணை விட்டு அகலாது.*

*முடிவுரை*

*வேதநாயக சாஸ்திரியார் இறைவனிடம் கொண்டுள்ள அன்பை, இறைவனை பாடித்துதிக்க வேண்டும், இறைவன் புகழைச் சொல்ல வேண்டுமென்ற துடிப்பை இவரது எல்லாப் படைப்புகளிலும் நாம் காணமுடிகின்றது. வேதநாயகர் அவரது இளமை பருவத்து முதல் இயற்றிய பல நூல்களிலும் இறைவனின் புகழையும், பெருமையினையும் எடுத்தியம்பு நோக்கத்துடன் மட்டுமல்லாது மக்களுக்கு இறைவார்த்தையினை (நற்செய்தியை) கொண்டு செல்ல வேண்டும் என்ற இறைநோக்குடனே அவரது படைப்புகளும் இருந்தன என்பதை நாம் உணரமுடிகிறது. இயேசுபிரான் அருளிய அருளுரைகளிலிருந்து பாமர மக்களும் பயன்பெரும்படி நற்செய்தியை நாட்டுப்புற இலக்கியங்கள் வாயிலாக வடித்து தந்தவர் சாஸ்திரியார். சாஸ்திரகும்மி நாட்டுப்புற இலக்கியங்களில் தாம் சொல்லி வந்த சமயம் சம்பந்தப்பட்ட கருத்துக்களையும், சமூக சமதர்ம போக்குள்ள கருத்துக்களையும் கூறுவதற்காகவே நாட்டுப்புற இலக்கியங்களை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொண்டார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இன்றைக்கும் சமூகத்தில் இருக்கின்ற பலவகை சாஸ்திரங்கள், சடங்கு முறைகள், மனித வாழ்விற்கு மேம்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கக் கூடியவை வாழ்வில் அன்றாடம் சந்திக்கிற நடைமுறைகளை கண்டித்தும், விமர்சித்தும், இறைவார்த்தைகளை சேர்த்து இயற்றியுள்ளதை நாம் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறன்றது.*

*துணைநூற் பட்டியல்*

1. இலக்கியத்திறன் டாக்டர். சி. மணிவளன் - ப.124
2. ஆஞ்சலா ரிச்சர்டு, த.வே.சா. இங்;கிலாந்து சார்லஸ் வெஸ்லியும் இயற்றிய பக்திபாடல்கள் ஓர் ஆய்வு – ப.32 (இ.திறன்) சி. மணிவளன்
3. இலக்கண விளக்கம் - யாப்பியல், கலா நிலையம், இராஜகோபாலச் சாரியார் - ப.296
4. கும்மிப்பாடல்கள் ஓர் ஆய்வு – ஆறு.இராமநாதன் (9-வது கருத்தரங்க ஆய்வுக்கோவை தொகுதி.1) - ப.81
5. சாஸ்திரக்கும்மி, வேதநாயக சாஸ்திரியார் பாடல்கள் - ப.04
6 மேலது – ப.21
7. மேலது – ப.22
8. மேலது – ப.22

********* ********* ********** ********* ********* ********** ********** **********